# பற்களை பாதுகாப்பது அவசியம் கே.எம்.சி.எச். டாக்டர் தகவல்



கோவை, ஜூன் 8: நவீன இம்ப்ளான்ட் பற்கள் மற்றும் பல் பாதுகாப்பு பற்றி கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை பல் சிகிச்சை நிபுணர் டாக்டர் சரவணன் கூறியதாவது:

பற்கள் முத்து போல் பிரகாசிக்க பல் பாதுகாப்பு அவசியம் பல் பாதுகாப்பு குழந்தைகளுக்கு முதல் பல் முளைத்தடவுடனேயே துவங்க வேண்டும்.

தினமும் இரு முறை சரியான முறையில் பல் துலக்குதல், உணவுக்கு இடையில் திண்பண்டங்களைத் தவிர்த்தல், இரு மாதங்களுக்கு ஒரு முறை டூத் பிரசை மாற்றுதல், சத்தான நார்பொருட்கள் நிறைந்த உணவை உட்கொள்ளுதல் மற்றும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பல் பரிசோதனை செய்தல் மிகவும் அவசியம்.

பல்சொத்தை: கருப்பு அல்லது பழுப்பு நிற புள்ளிகள், கோடுகள் தெரிந்தவுடன் பல் மருத்துவரை அணுகி, பல் சொத்தையை சுத்தம் செய்து, பல்லின் நிறத்திலேயே செயற்கை எனாமல் கொண்டு பல்லை அடைத்து விடலாம்.

வேர் குழாய் சிகிச்சை: பல் சொத்தை முற்றி, வலி வந்து விட்டால், பல்லை அகற்றாமல் பல்லை காப்பாற்ற இந்த சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

ஈறு நோய்: வாய் தர் நாற்றம், ஈறுகளில் ரத்தம் கசிதல், பல் துலக்கிய பின்பும் வாய் வழுவழுப்பாக இருத்தல் ஆகியவை ஈறு நோய்க்கான அறிகுறிகளாகும்.

இந்த அறிகுறிகள் தென்பட்டவுடன் பல் மருத்துவரை அணுகி, பற்களில் படிந்துள்ள காரைகளை, கரைகளை சுத்தம் செய்தல் அவசியம்.

நிறம் மாறிய பற்களுக்கு எனாமல் வெனீரிங் மற்றும் கிரவுன் சிகிச்சையும் வரிசை மாறிய மற்றும் முன் துருத்திய பற்களுக்கு நவீன கிளிப் சிகிச்சையும் செய்வது அவசியம்.

இம்ப்ளான்ட் பற்கள்: பல் போனால் சொல் போச்சு என்பது பழமொழி. பல் போனாலும் சொல் போகாமல் இருக்க, முகத்துக்கு அழகு கூட்ட, இழந்த பற்களுக்கு செயற்கை பற்கள் பொறுத்துதல் அவசியம்.

இதில், எடுத்து மாட்டக்கூடிய பற்கள், பிரிட்ஜ் பற்கள், நிரந்தர இம்ப்ளாண்ட் பற்கள் ஆகிய வகைகள் உள்ளன.

தாடை எலும்பில் டைட்டானியம் ஸ்க்ரு பொருத்தி அதன் மேல் பல் கட்டுதல் ஆகும். இந்த முறையில் ஒரு பல் முதல் முழு பல் செட் வரை கட்டலாம்.

பற்களை கழற்றி மாற்ற தேவையில்லை. நிரந்தரமாக இயற்கை பல் போல் நம் எலும்புடன் பொருந்தி விடும். இதில் உடம்பிற்கு எந்த பக்க விளைவுகளும் ஒவ்வாமையும் ஏற்படாது.

பல் நகை: புன்னகைக்கு மேலும் மெருகூட்ட பற்களில் விதவிதமான நிறங்களில் செயற்கை கற்களை பொருத்தி கொள்ளலாம். பற்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை.

இவ்வாறு டாக்டர் சரவணன் கூறினார்.